SJK (T) TASEK PERMAI
14120 SIMPANG AMPAT
COMMITTED TOWARDS SUCCESS

**பள்ளியின் 46-ஆம் ஆண்டின் போட்டி விளையாட்டு தொடர்பான அறிக்கை ஒன்றை எழுதுக.**

வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்டக் கல்வி அதிகாரி பரிசுகளை எடுத்து வழங்கினார். நீல இல்லம் 100 புள்ளிகளைப் பெற்று சிறந்த இல்லமாக வாகை சூடியது. இறுதியாக பிற்பகல் மணி இரண்டுக்குப் போட்டி விளையாட்டுச் செயலாளர் திரு.புஸ்பநாதன் அவர்களின் நன்றியுரையுடன் இனிதே முடிவுற்றது.

கடந்த 06.02.2021-யில் பள்ளியின் நாற்பத்து ஆறாம் ஆண்டுப் போட்டி விளையாட்டு மிக விமரிசையாக பள்ளித் திடலில் நடைபெற்றது. இப்போட்டி விளையாட்டு காலை 9:00 மணிக்குத் தொடங்கப்பட்டது.

அறிக்கை தயாரித்தவர், 28.02.2021

தேசிய வகை தாசேக் பெர்மாய் தமிழ்ப்பள்ளி
46-ஆம் ஆண்டு பள்ளி போட்டி விளையாட்டு அறிக்கை

போட்டி விளையாட்டில் முப்பது விளையாட்டுகள் இடம் பெற்றிருந்தன. அவற்றுள் 100 மீட்டர் நேரோட்டம், அஞ்சல் ஓட்டம், தடை ஓட்டம் மற்றும் குழு விளையாட்டுகள் அடங்கும். அனைவரும் முழுமுயற்சியுடன் தங்கள் திறமைகளைக் காட்டி போட்டி விளையாட்டில் பங்கேற்றனர். இறுதியாக, பெற்றோர்களுக்கும் முன்னாள் மாணவர்களுக்கும் போட்டி நடைபெற்றன.

பள்ளி விளையாட்டில் மாவட்டக் கல்வி அதிகாரி, பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக வந்திருந்தனர். ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் இப்போட்டியில் கலந்துக் கொண்டனர். பள்ளியின் தலைமையாசிரியர் போட்டிற்கு வருகை தந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

ப. புஸ்பநாதன்
ஏற்பாட்டுக்குழுச் செயலாளர்
தேசிய வகை தாசேக் பெர்மாய் தமிழ்ப்பள்ளி

போட்டி தொடங்குவதற்கு முன் மாணவர்கள் இல்ல உடைகளை உடுத்திக் கொண்டு தத்தம் இல்லங்களுக்குச் சென்றனர். பின், ஒவ்வொரு இல்லமாக சிவப்பு, நீலம், பச்சை மற்றும் மஞ்சள் ஆகிய இல்லங்கள் திடலில் அணிவகுத்து வரிசையாகச் சென்றன. மாவட்டக்கல்வி அதிகாரி போட்டியை முறையாக பலூன் வெட்டி தொடக்கி வைத்தார்.

1 2 3 4 5 6 7 8

ஆக்கம் : ஷாமினி சந்திரன்

LIVEWORKSHEETS